அ திரு. குகன் தமது வீட்டிலிருந்து மாலை மணி 6.30க்கு சிரம்பானில் இருக்கும் தம் நண்பரின் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். அவர் இரவு மணி 8.50க்கு நண்பரின் வீட்டை அடைந்தார்.

1. திரு. குகன் பயணம் செய்த கால அளவை மணியிலும் நிமிடத்திலும் குறிப்பிடுக. மணி நிமிடம்
2. திரு. குகன் தமது வீட்டிலிருந்து மாலை மணி 5.45க்குப் புறப்பட்டிருந்தால் அவர் எத்தனை மணிக்குச் சிரம்பானை அடைந்திருப்பார்? இரவு ______ க்கு

ஆ மயிலவன் மேம்பாட்டு நிறுவனம் இரண்டு கட்டடங்களை நிர்மாணித்தது. முதல் கட்டடத்தை நிர்மாணிக்க $\frac{3}{4}$ ஆண்டை எடுத்துக் கொண்டது. இரண்டாவது கட்டடத்தை நிர்மாணிக்க, முதல் கட்டடத்தைவிட 8 மாதங்கள் அதிகம் எடுத்துக் கொண்டது.

1. அந்த நிறுவனம் முதல் கட்டடத்தை நிர்மாணிக்க எடுத்துக் கொண்ட கால அளவை மாதத்தில் கணக்கிடுக. மாதங்கள்
2. இரண்டு கட்டடங்களை நிர்மாணிக்க எடுத்துக் கொண்ட கால வேறுபாட்டை ஆண்டில் கணக்கிடுக. ஆண்டு

இ பேரங்காடி ஒன்றனைச் சீரமைப்புச் செய்ய ஒரு நிறுவனம் 13 ஏப்ரல் 2018இல் பணியைத் தொடங்கியது. அந்த நிறுவனம் சீரமைப்புப் பணியை 9 செப்டம்பர் 2018இல் பூர்த்தி செய்தது.

1. அந்த நிறுவனம் பேரங்காடியின் சீரமைப்புப் பணிகளைச் செய்து முடிக்க எடுத்துக் கொண்ட கால அளவை நாள்களில் கணக்கிடுக. ______ நாள்கள்
2. அதே நிறுவனம் அந்தச் சீரமைப்புப் பணியை 5 நாள்களுக்கு முன்பாகவே முடித்திருந்தால், எந்தத் திகதியில் அதன் பணிகள் முடிவடைந்திருக்கும்?

______________ (எகா: 2.06.2019)

LIVEWORKSHEETS